# தேசிய மாவீரர் நாள்

# 2000



**எங்கள் மாவீரர்களே! உங்கள் நெஞ்சுரத்தில், நெடும் பயணம் தொடர்ந்தீர்கள், தமிழீழ இலட்சியத்திற்காய் உயிர் துறந்தீர்கள், வீரியத்தில் பகை எரிந்து நீறான வேளையில் உங்கள் திருமுகம் எம் இதயத்தில் மலர்ந்தது. எம் உறவுகளே – மாவீரர்களே உங்கள் நினைவுகளில், உங்கள் பாதச்சுவடுகளில் எம் மக்களின் விடுதலை பயணம் தொடர்கின்றது.**

**WORLD TAMIL COORDINATING COMMITTEE**

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

TEL: (718) 657-9463 FAX (718) 523-7399

170-10 CEDARCROFT ROAD, SUIT 1L, JAMAICA, NEW YORK 11432 USA



*எமது மண்ணிற்காக, எமது மக்களுக்காக, விடுதலை என்ற உன்னத விழுமியத்திற்காக, தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கொள்ளும் இன்றைய நாள் ஒரு புனித நாள். இந் நன்நாளில், எமது ஆன்மக் கதவுகளை அப்புனிதர்களுக்காகத் திறந்து கொள்வோம்.*

*நீங்காத நினைவுகளாக, எம்மோடு ஒன்றிக் கலந்து விட்ட உணர்வுகளாக, காலத்தால் சாகாது என்றும் எம்முள் உயிர்வாழும் இம் மாவீரர்களை இன்று கௌரவிப்பதில் தமிழீழ தேசம் பெருமை கொள்கிறது.*

*மாவீரர் நினைவாக ஈகச்சுடரை ஏற்றும்பொழுது, அந்த எரியும் சுடரில், அந்தத் தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான பொழுதில், நான் ஒரு தரிசனத்தைக் காண்கிறேன்.*

*அக்கினியாகப் பிரகாசித்தபடி, ஆயிரமாயிரம் மனித தீபங்கள், நெருப்பு நதிபோல, ஒளிகாட்டி, வழிகாட்டிச் செல்லும் ஒரு அதிசய காட்சி திடீரென மனத்திரையில் தோன்றி மறையும்.*

*மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தின் வழிகாட்டிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை. அவர்களே எமக்கு ஒளிகாட்டிகள்.*

*மாவீரர்களுக்கு ஈகச்சுடரேற்றி அவர்களை நினைவு கொள்ளும் இந்தப் புனித நாளில் நாமும் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டிக்கொள்வோம். எமது தேசத்தின் சுதந்திரத்திற்காக, அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்காக எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்போமென நாம் எமக்குள் வீரசபதம் செய்து கொள்வோம்.*

*மேதகு தி.ந. வே. பிரபாகரன்*

பாடல் (1) இறைவனின் புகழ் பா

## திருப்பலி சடங்கு

### தொடக்க சடங்கு

நுழைவு கீதம்

குரு: பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே.

எல்: ஆமென்.

வாழ்த்துக் கூறுதல்:

குரு: நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், பரிசுத்த ஆவியின் நட்புறவும் உங்களனைவரோடும் இருப்பதாக.

எல்: உம்மோடும் இருப்பதாக.

### மன்னிப்பு வழிபாடு:

குரு: சகோதரரே, திருப்பலி ஒப்புகொடுக்க நாம் தகுதி பெறும் பொருட்டு நம் பாவங்களை ஏற்றுக் கொள்வோம்.
(சற்று நேரம் மௌனம்)

குரு: உள்ளம் நொருங்கி வருந்துவோரைக் குணமாக்க அனுப்பபெற்ற ஆண்டவரே, இரக்கமாயிரும்.

எல்: ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு: பாவிகளைத்தேடி மீட்க வந்த கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.

எல்: கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.

சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக் கொள்ளும் ஒரு வியாபரப் பண்டம் அல்ல. அது இரத்தம் சிந்தி வென்று கொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

தமிழீழத் தேசியத் தலைவர்

குரு: எங்களுக்காகப் பரிந்து பேசத் தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கும் ஆண்டவரே, இரக்கமாயிரும்.

எல்: ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு: எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து, நம் பாவங்களை மன்னித்து, நம்மை நித்திய வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

எல்: ஆமென்.

## வானவர் கீதம்

உன்னதங்களில் கடவுளுக்கு
மகிமை உண்டாகுக
பூவுலகில் நன்மனத்தோர்க்கு
அமைதியும் ஆகுக.
உம்மை புகழ்கின்றோம்,
உம்மை வாழ்த்துகின்றோம்,
உம்மை ஆராதிக்கின்றோம்.
உம்மை மகிமைப் படுத்துகின்றோம்
உமது மேலான மாட்சிமையின் பொருட்டு
உமக்கு நன்றி கூறுகின்றோம்.
ஆண்டவராகிய சர்வேசுரா, வானுலக அரசரே
எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரா,
ஏக சுதனாய் செனித்த ஆண்டவரே,
யேசு கிறிஸ்துவே,
ஆண்டவராகிய சர்வேசுரா, சர்வேசுரனின்
செம்மறியே, பிதாவின் சுதனே,
உலகின் பாவங்களை போக்குபவரே,
எங்கள் மேல் இரக்கமாயிரும்.

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைச் சந்திக்கின்றது. பல நெருக்கடிகளை எதிர்கொள்கிறது கொந்தளிப்பான பல சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கின்றது.

தமிழீழத் தேசியத் தலைவர்

உலகின் பாவங்களை போக்குபவரே,
எங்கள் மன்றாட்டை ஏற்றருளும்.
பிதாவின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே,
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
ஏனெனில் யேசுகிறிஸ்துவே,
நீர் ஒருவரே பரிசுத்தர்,
நீர் ஒருவரே ஆண்டவர்,
நீர் ஒருவரே உன்னதர்,
பரிசுத்த ஆவியோடு, பிதாவாகிய
சர்வேசுரனின் மாட்சிமையில் இருப்பவர் நீரே.
ஆமேன்.

**சபை மன்றாட்டு**

குரு: செபிப்போமாக.........
*( எல்லோரும் மௌனமாக செபித்தல் )*

**எல்: ஆமென்**

## இறைவாக்கு வழிபாடு

பாடு (2)

*(முதல் வாசக முடிவில்)* — தியானப்பா → திருப்பாடல்

வாசகர்: இது ஆண்டவரின் அருள்வாக்கு.

**எல்: இறைவா உமக்கு நன்றி.**

*(இரண்டாவது வாசக முடிவில்)*

வாசகர்: இது ஆண்டவரின் அருள்வாக்கு.

**எல்: இறைவா உமக்கு நன்றி.**

ஜயசிக்குறுய்"ச் சமர் சாதாரண சமரல்ல. சமர்களுக்கெல்லாம் தாய்ச்சமரக, எமது மண்ணில் நிகழ்ந்த பெரும் சமர்.

தமிழீழத் தேசியத் தலைவர்

## நற்செய்தி வாசகம்

குரு: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

**எல்: உம்மோடும் இருப்பாராக.**

குரு: (பெயர்).....எழுதிய
நற்செய்தியிலிருந்து வாசகம்.

**எல்: ஆண்டவரே உமக்கு மகிமை.**

*(நற்செய்தியின் முடிவில்)*
குரு: இது கிறிஸ்துவின் நற்செய்தி.

**எல்: கிறிஸ்துவே உமக்கு புகழ்.**

## விசுவாச அறிக்கை

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த
எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை
விசுவசிக்கின்றேன். அவருடைய ஏக சுதனாகிய
நம்முடைய நாதர்இயேசு கிறிஸ்துவையும்
விசுவசிக்கிறேன்.
இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய்
உற்பவித்துக் கன்னிமரியிடமிருந்து பிறந்தார்.
போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டுச்
சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்
செய்யப்பட்டார்.
பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள்
மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.
பரலோகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல
பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பக்கத்தில்
வீற்றிருக்கிறார்.

எந்த ஒரு தேசம், எந்த ஒரு மக்கள் சமூகம், சுதந்திரம் வேண்டிப் போராடுகிறதோ அங்குதான் வரலாற்றுப் புயல் மையம் கொள்கிறது.

**தமிழீழத் தேசியத் தலைவர்**

அவ்விடத்திலிருந்து சீவியரையும் மரித்தவரையும்
நடுத்தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியை
விசுவசிக்கிறேன். பரிசுத்த கத்தோலிக்க
திருச்சபையையும்,புனிதர்களுடைய
சமூக உறவையும், பாவ பொறுத்தலையும்,
சரீர உத்தானத்தையும்,
நித்திய சீவியத்தை விசுவசிக்கிறேன் - ஆமென்

*இப்போது இறைமக்களின் மன்றாட்டு*
*( பொது மன்றாட்டு ) இடம் பெறும்.*

தம்பாட்டு
மன்றாட்டு
எம்மக்கள்

## நன்றி வழிபாடு (திருப்பலி வழிபாடு)

*( காணிக்கைகளைத் தயார் செய்தல் )*

அப்பம் ஒப்புகொடுத்தல்

குரு: ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா,
உம்மை போற்றுகிறோம். ஏனெனில்
உமது அருட்பெருக்கிலிருந்து நாங்கள்
இந்த அப்பத்தைப் பெற்றுக்கொண்டோம்.
நிலத்தின் விளைவும் மனித உழைப்பின்
பயனுமான இந்த அப்பத்தை உமக்கு
ஒப்புக்கொடுக்கிறோம்.
இது எங்களுக்கு வாழ்வளிக்கும்
அப்பமாக மாறும்.

எல்: இறைவன் என்றென்றும்
வாழ்த்தப்பெறுவாராக.

இரசம்ஒப்புகொடுத்தல்

ஓர் உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன், ஆனால்
உயிரிலும் உன்னதமானது எமது உரிமை எமது சுதந்திரம் எமது
கௌரவம்.

தமிழீழத் தேசியத் தலைவர்

குரு: ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா,
உம்மை போற்றுகிறோம். ஏனெனில்..........
இது எங்கள் ஆன்ம பானமாக மாறும்.

**எல்: இறைவன் என்றென்றும்
வாழ்த்தப்பெறுவாராக.**

குரு: சகோதரரே, நாம் அனைவரும்
ஒப்புக்கொடுக்கும் இப்பலி எல்லாம்
வல்ல தந்தையாகிய இறைவனுக்கு
ஏற்றதாகும்படி செபியுங்கள்.

**எல்: ஆண்டவர் தமது திருப்பெயரின்
புகழ்ச்சிக்காகவும் மகிமைக்காகவும்,
நமது நன்மைக்காகவும், திருச்சபை
அனைத்தின் நலனுக்காகவும்
உமது கையிலிருந்து இப்பலியை
ஏற்றுக்கொள்வாராக.**

**காணிக்கை மன்றாட்டு**

**எல்: ஆமென்**

**தொடக்கவுரை**

குரு: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

**எல்: உம்மோடும் இருப்பாராக.**

குரு: இதயங்களை ஆண்டவரிடம் எழுப்புங்கள்.

**எல்: ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்**

வெளிப்படாதபடி ஒளிந்திருப்பது ஒன்றுமில்லை. வெளியாகாதபடி
மறைந்திருப்பதும் ஒன்றுமில்லை. கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்.
( மாற்கு: 5:22 )

உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்

( அரு: 11:25 )

குரு: நம் இறைவனாகிய ஆண்டவருக்கு
நன்றி கூறுவோம்.

**எல்: அது தகுதியும் நீதியுமானதே**

..........*(தொடக்க உரையின் முடிவில்)*

**எல்: பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்**
**மூவுலகின் தேவனாகிய ஆண்டவர்.**
**வானமும் பூமியும் உமது**
**மகிமையால் நிறைந்துள்ளன.**
**உன்னதங்களில் ஓசான்னா!**
**ஆண்டவர் பெயரால் வருபவர்**
**ஆசிபெற்றவர்**
**உன்னதங்களிலே ஓசான்னா!**

நற்கருணை மன்றாட்டு .......

குரு: இது விசுவாசத்தின் மறைபொருள்.

**மக்களின் வாழ்த்தொலி:**

**ஆண்டவரே, தேவரீர் வருமளவும்**
**உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம்.**
**உமது உயிர்ப்பையும் எடுத்துரைக்கின்றோம்.**

## திருவிருந்துச் சடங்கு

குரு: மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்டு,
தேவ படிப்பினையால் பயிற்சி பெற்ற
நாம் துணிந்து சொல்வோம்.

மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் உயிர் வாழ்கிறான்
( மத்: 4:4)

நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களதே.
( மத்: 5:10 )

எல்: பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே!
உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக,
உம்முடைய இராச்சியம் வருக,
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவதுபோல பூலோகத்திலும்
செய்யப்படுவதாக.
எங்கள் அனுதின உணவை எங்களுக்கு
இன்று அளித்தருளும். எங்களுக்குத் தீமை
செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.
எங்களை சோதனையில் விழவிடாதேயும்.
தின்மையிலிருந்து எங்களை இரட்சித்தருளும்.

குரு: ஆண்டவரே, தீமை அனைத்திலிருந்தும்
எங்களை விடுவித்து, எங்கள் வாழ்நாளில்
சமாதானத்தைக் கருணைபுரிந்து அருள
உம்மை மன்றாடுகிறோம்.
உமது இரக்கத்தின் உதவியால் நாங்கள்
பாவத்திலிருந்து எப்போதும் விடுதலை பெற்று
யாதொரு கலக்கமுமின்றி நலமாயிருப்போமாக.
நாங்கள் நம்பியிருக்கும் பேரின்பவாழ்வையும்
எம் மீட்பராகிய யேசு கிறிஸ்துவின் வருகையையும்
மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

எல்: ஏனெனில், அரசும் வல்லமையும்
மாட்சியும் என்றென்றும் உமதே.

குரு: ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே, சமாதானத்தை
உங்களுக்கு விட்டுச்செல்கிறேன், என் சமாதானத்தையே
உங்களுக்கு அளிக்கிறேன் என்று உம் அப்போஸ்தலர்களுக்கு
மொழிந்தீரே:

கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் கண்டடை
வீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்.

( லூக்: 11: 9-10 )

எங்கள் பாவங்களைப் பாராமல், உமது
விசுவாசத்தையே கண்ணோக்கி, அதற்கு சமாதானத்தையும்
ஒற்றுமையையும் தந்தருளத் திருவுளம் கொள்வீராக.
என்றென்றும் வாழ்ந்து ஆட்சிசெய்கின்றவர் நீரே.

எல்: ஆமென்

குரு: ஆண்டவருடைய சமாதானம் உங்களோடு
என்றும் இருப்பதாக.

எல்: உம்மோடும் இருப்பதாக.

குரு: ஒருவருக்கொருவர் சமாதானத்தை அறிவித்துக்கொள்வோம்.

குரு அப்பத்தை பிட்கையில்:

எல்: உலகின் பாவங்களைப் போக்கும்
இறைவனின் செம்மறியே,
எங்கள் மேல் இரக்கமாயிரும்.(2)
உலகின் பாவங்களைப் போக்கும்
இறைவனின் செம்மறியே,
எங்களுக்கு சமாதானம் தந்தருளும்.

(நற்கருணை வழங்குமுன்)

குரு: இதோ, இறைவனின் செம்மறி,
இதோ, உலகின்பாவங்களை போக்குபவர்:
செம்மறியின் விருந்துக்கு அழைக்கப்பெற்றோர்
பேறுபெற்றோர்.

தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு
எவனிடமுமில்லை.

( அரு: 15:13 )

நான் உங்களிடம் அன்பு கூர்ந்தது போல நீங்களும் ஒருவர்
ஒருவரிடம் அன்பு கூர வேண்டுமென்பதே எனது கட்டளை.

( அரு: 15:12 )

எல்: ஆண்டவரே, தேவரீர் என் உள்ளத்தில்
எழுந்தருள நான் தகுதியற்றவன்(ள்).
ஆனால் ஒரு வார்த்தை மட்டும்
சொல்லியருளும், எனது ஆன்மா
குணமடையும்.

## நன்றி மன்றாட்டு

குரு: செபிப்போமாக............
(மன்றாட்டின் முடிவில்)
எல்: ஆமென்

## முடிவுச் சடங்கு

குரு: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல்: உம்மோடும் இருப்பாராக.

குரு: எல்லாம் வல்ல இறைவன், பிதா, சுதன், + பரிசுத்த ஆவி
உங்களை ஆசீர்வதிப்பாராக.

எல்: ஆமென்

குரு: இறைவனின் சமாதானத்தில் சென்று வாருங்கள்.

எல்: இறைவா, உமக்கு நன்றி.

நீதிமான் காலம் வருமுன்பே இறந்துவிட்டாலும் இளைப்பாற்றி
அடைவான்

( ஞானஆகமம்: 5:7 )

உழுகிறவன் நம்பிக்கையோடு உழவேண்டும். போரடிக்கிறவன்
பலனில் பங்கு கிடைக்கும் என்னும் நம்பிக்கையோடு வேலை செய்ய
வேண்டும்

( II கொரிந்: 9:10 )

வருகைப் பவனியுடன்

வருகைப் பாடல்.

# இறைவனுன் புகழ் பாட

**பல்லவி**

இறைவனுன் புகழ் பாட - இங்கே
இதயங்கள் பல கோடி
துறையெல்லாம் கடந்தவனே - உன்
துணையொன்றை நாம் தேடி (2) இறைவனுன் ...

**சரணம்**

1. மறைபொருள் ஆனவனே - உன்னை
மனங்களில் சிறை வைத்தோம் - (2 தடவை)
குறையுள்ள கோயிலிலே - உன்னைக்
கொண்டு நாம் குடிவைத்தோம் - ( இறைவனுன் )

2. அன்பு உன் பெயர் அறிவோம் - தூய
அறிவென்றும் நாம் தெரிவோம் - (2 தடவை )
இன்பம் நீ எனத் தெரிவோம் - நல்ல
இரக்கம் நீ என மொழிவோம் - ( இறைவனுன் )

3. சத்தியம் உன் பெயராம் - எனச்
சாற்றுவோம் எம் உயிராம் - ( 2 தடவை )
நித்தமே உனைப் பணிந்தோம் - உன்
நினைவினில் நாம் களித்தோம் - ( இறைவனுன் )

## திருப் பாதம் நம்பி வந்தோம்.

*திருப் பாதம் நம்பி வந்தோம்*
*கிருபை நிறை யேசுவே*
*உமதன்பைக் கண்டடைந்தோம்*
*தேவ சமூகத்திலே* – (2 தடவை)

*இளைப்பாறுதல் தரும் தேவா*
*களைத்தோரைத் தேற்றிடுமே* – (2 தடவை)
*சிலுவை நிழல் எங்கள் தஞ்சம்*
*சுகமாய் அங்கு தங்கிடுவோம்* – (2 தடவை)

(*திருப்பாதம்............*)

*என்னைக் கைவிடாதீரும் நாதா*
*என்ன இன்னல் நேரிடினும்* – (2 தடவை)
*கருத்தாய் விசாரித்து என்றும்*
*கனிவோடெம்மை நோக்கிடுமே* – (2 தடவை)

(*திருப்பாதம்............*)

*என்னை நோக்கிக் கூப்பிடும் என்றீர்*
*இன்னல் துன்ப வேளையிலும்*– (2 தடவை)
*உமக்காக யாவும் சகிப்பேன்*
*உமது பெலன் ஈந்திடுமே* – (2 தடவை)

(*திருப்பாதம்............*)

---

**தமிழ்த் தாய் வயிற்றில் உதித்தவரே**
**தமிழ்த் தாய்மண் மீட்டிடப் புறப்பட்டீர்**
**தமிழ்மொழி காத்திட விரைந்திட்டீர்**
**தமிழுக்கென்றே உயிர் கொடுத்தீர்**
**தமிழ் மண்ணில் அங்கே உரமானீர்**
**தமிழர் நாங்கள் வணங்குகின்றோம்.**

# காணிக்கைப் பாடல்.

*மரித்த எம் மக்களுக்கு*
*மனமிரங்கித் தேவா*
*இன்ப சாந்தி தாரும் – (2 தடவை)*

*மரணமும் பாவமும் வென்றவனே*
*மனுக்குலம் காத்த மாதவனே*
*மாவீரர் தஞ்சம் ஆகிடுவாய்*
*மாண்புயர் வானில் சேர்த்திடுவாய்*

*(மரித்த........)*

*வாழ்க்கையின் குறிக்கோள் நீயல்லவோ*
*எம்மை அணைத்திடும் தாயல்லவோ*
*வாழ்வினை நீத்தும் வாழ்வெடுத்த*
*வாழ்வே இவர்களை ஏற்றிடுவாய்.*

*(மரித்த........)*

திரு விருந்துப் பாடல்.

# நெஞ்சத்திலே தூய்மை

**பல்லவி**

**நெஞ்சத்திலே தூய்மையுண்டோ**
**யேசு வருகின்றார்**
**நொறுங்குண்ட நெஞ்சத்தையே**
**யேசு அழைக்கின்றார்**

**சரணம்**

1. **வருந்திச் சுமக்கும் பாவம் - நம்மைக்**
**கொடிய இருளில் சேர்க்கும் (2)**
**செய்த பாவம் இனிப்போதும்**
**அவர் பாதம் வந்து சேரும் - (2 தடவை )**
**(நெஞ்ச.. )**

2. **குருதி சிந்தும் நெஞ்சம் - நம்மைக்**
**கூர்ந்து நோக்கும் கண்கள் (2)**
**அங்கு பாரும் செந்நீர் வெள்ளம்**
**அவர் பாதம் வந்து சேரும் - ( 2 தடவை )**
**(நெஞ்ச)**

3. **சிலுவை சுமந்த கரங்கள் - நம்மை**
**வாழ வைக்கும் கரங்கள் (2)**
**இறைவாழ்வு நம்மில் மலர**
**அவர் பாதம் வந்து சேரும் - (2 தடவை)**
**(நெஞ்ச .. )**

மாவீரர்கள் அடிபற்றி.......

உஸ்......
ஆர்ப்பாட்டம் வேண்டாம்!
அவர்களுக்குப்பிடிக்காது!
அமைதியாக.........
உறுதியோடு வாருங்கள்
அவர்கள் அடிதொடருவோம்.



# போராட்டம்

- அடேல் ஆன் -

*************

பூமியின் இதயத்திலிருந்து
ஒரு ஓலம் எழுகிறது.
கொடுந்துயரில் விம்மி
எமது தேசம் அழுகிறது.
நாட்டின் உடல் சிதைந்த உதிரம்
நதியாக கரைபுரண்டு ஓடுகிறது.
நிலம் சிவந்து நடுங்க
நெருப்பு விதைகள்
வாய்பிளந்து வெடிக்கிறது.
மண்ணின் மடியில்
புதுமுளைகள் தளிர்க்க
நம்பிக்கை பிறக்கிறது.

வெய்யிலில் வளர்ந்து
வெள்ளத்தில் நீராடி
புயலில் விளையாடி
தலைநிமிர்ந்தன தளிர்கள்.
தேசத்தின் அடிவானில்
உதிக்கும் சூரியனின்
இரத்தம் பெருக்கெடுக்க
புதிய வரலாறு
உதயம் பெற்றது.
பெருமைபெற்ற பழமை
உறுதிபெற்ற புதுமையாக
மறுபிறப்பு எடுத்தது.

சுதந்திர தீ
சுவாலையாக எரிந்து
பூமியைச் சுடுகிறது.
போராளிகளின் மூச்சு
எரிமலையாய் கொதிக்கிறது
சாவின் கரங்களால்
தணிக்க முடியாத
நெருப்பு அலைகள்
வீறுகொண்டு எழுந்து
விடுதலை முரசு கொட்ட
எமது தேசம்
விழித்தது.

(ஆங்கிலத்தில் இருந்து
மொழிபெயர்க்கப்பட்டது)

# கல்லறையில் உறங்கும் புனிதங்கள்



சொந்தத் தேவைகள் நிறைவு செய்யாது
சொந்தம் விட்டோடி ஈழமண் மீட்பதற்கு
சொந்த ஊர்விட்டு சென்றீர் எம்மை
சொந்தங்களோடு வாழ வைப்பதற்கே
உல்லாசப் பயணங்களை ஊதியெறிந்து
உறங்காத தாயக நினைவுடன் மடிந்து
உலகம் போற்றும் சரித்திர மனிதர்கள்
உங்களை நாம் நாடோறும் வணங்குகின்றோம்.
புயலாய் எழுந்தே தீமைகள் அழித்தீர்கள்
புறஞ்செறிந்த காவியம் இங்கே படைத்தீர்கள்
புதியதோர் வரலாற்றுப் பாதையிலே நீங்கள்.
புனிதத்தின் விதையாகி மண்ணில் புதைந்தீர்கள்
முகங்கள் எமக்கு தெரியாது
முத்தான உயிரை எமக்கீந்து
முடிவொன்று காணப் பிறப்பெடுத்து
முத்திபெற்று மிகுபுகழும் அடைந்தீர்கள்
கனவினைக் காக்கும் நாளிலே
கல்லறையில் உறங்கும் புனிதருக்கு
கார்த்திகையில் தூய மலர் தூவி
காணிக்கை செய்கிறோம் நெய் விளக்கே!

வெளியீடு:

உலகத் தமிழர் மகளிர் அமைப்பு

WORLD TAMIL WOMEN ORGANISATION

எந்தப் பலத்திலும் பலவீனம் இருக்கும். அதனைத் தேடிக் கண்டுபிடித்து, அதற்கேற்ற விதத்தில் துணிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்தான் எங்களுடைய வெற்றி தங்கியிருக்கின்றது.

தமிழீழத் தேசியத் தலைவர்